Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபேறுநில்.

| | | |
|---|---|---|
| வெண்டாமரை க. | 1913-ம் ஆ அக்டோபர் மீ | இதழ் கo. |



பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா | ரூ 1 | வெளிநாட்டுக்கு | ரூ 2 |
| தபாற்கூலி | அணா 4 | தனி சஞ்சிகை | அணா 2 |

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

## உள்ளுறை.


பக்கம்

கடவுள் : — பத்திராதிபர். ... ... ... ... 1

பாலசிக்ஷை :- ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 5

புதுவையில் கக்கவுஸ் (மலவறை) : — பரதேசவாசி. .... 8

ரமணி (ஓர் காதற் கதை) : — ஸ்ரீமத் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. ... ... ... ... 11

மணிமேகலை : — பத்திராதிபர். ... ... ... ... 15

அக்ஷாவதான விடுகதை வினவிற்கு விடை : — பைங்கிளி நேயன்.... ... ... ... ... ... 19

மங்கலம் :—வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். ... ... ... ... 20

நியாயமாலா :—ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சீபுரம். ... ... ... ... ... ... 21

முன் பின் செத்திருக்காலன்றோ சுடுகாட்டிற்குப் போகும் வழிதெரியும் : — இதோபதேசி. ... ... 23



## பரிசுத்தமான தேன்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால் நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில் விற்கும் வெல்லப்பாகைக்கலந்த தண்ணீர்போன்ற தேனல்ல. இத்தேன் மிகவும் தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவு மிருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சாக்கு. மேலும் வைத்திய சாஸ்திர முறைப்படிக்கு எங்களால் சுத்தியும் செய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில் விற்கும் தேன் ஒரு சேர் சேர்க்குமிடத்தில் நம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது. இப்படிப்பட்ட மேலானதும், சுத்தமானதும், சுயமானதுமாகிய சாக்குக் கிடைப்பதரிது. மருந்துகளை இத் தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின் வீரியமும் குணமும் அதிகரிக்கச் செய்யும்.

விலை டின் 1-க்கு அணா 12. ஒன்று அல்லது இரண்டு டின்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய்,

ஆயுர்வேத அவுஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள்கோயில் சந்நிதி,

தஞ்சாவூர்.

215

199

உ

ஸ்ரீவாணிசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ அக்டோபர் மீ [இதழ் க0.

## இலௌகிகப் பகுதி.

### கடவுள்.

(புதுவைக் கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவத்தில் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.)

(தொடர்ச்சி.)

கடவுளோடு இரண்டறக் கலத்தலாகிய மோக்ஷ சாம்பிராச்சியத்தை மக்கட் பிறப்பைப்பெற்ற நாம் ஒவ்வொருவரும் அடைய வேண்டுதலைக்கோரியே நமக்கு மதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தெய்வம் ஒன்றாயிருக்க அதனையடையும்பொருட்டு அநுஷ்டித்தற்குரிய வழிகளாகிய மதங்களைப் பற்பலவாக அநுபூதிமான்களாகிய நம் பெரியோர் வெளிப்படுத்திவைத்ததற்குக் காரணம் என்னையோவென விசாரிக்கப்புகின், பாசபந்தத்தில் உழன்றுகொண்டிருக்கும் ஆன்மாக்களாகிய நாம் எல்லோரும் கடைத்தேறும்பொருட்டு அவர்கட்கெழுந்த கருணையேயென்று நிச்சயமாகச் சொல்லலாம். ஏனெனில்,

உலகத்தில் ஆன்மாக்களெல்லாம் ஒரே பரிபாகமுடையன வல்லவென்பது எவர்க்கும் தெரிந்ததே. ஒருவர்க்குள்ள குணாதிசயங்கள் மற்றொருவர்க்கின்றி வேறுபட்டிருத்தலே இதற்குத் திருஷ்டாந்தமென்க. வேறு சாக்ஷி வேண்டுவதில்லை. இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட பரிபாகங்களையுடைய ஆன்மாக்களெல்லாம் அடையவேண்டுவது அத்தெய்வம் ஒன்றையே. ஆகவே பரிபாகங்களுக்குத் தகுந்த பல மார்க்கங்களிருந்தாலன்றி ஒன்றாகிய அத்தெய்வத்தை யடைதல் கூடாது.

அறிவுடையீர்! யோசியுங்கள். உலகத்திலுள்ள நாம் அனைவரும் ஓர் ஊருக்குப் போகவேண்டுமேல் நாம் யாவரும் ஒரே ஊரிலிருந்தால் அவ்வூருக்கு ஒரே வழியாய்ப் போய்ச் சேர்தல் கூடும். அங்ஙனமன்றி நாம் போகவேண்டிய ஊருக்குச் சமீபமும் தூரமுமாயுள்ள பல பல வூர்களிலும் இருப்போமேல் ஒரே வழியாக எப்படிப் போதல் கூடும்? கூடாது. அவ்வவ் வூர்களினின்றும் உண்டாக்கப்பட்ட அவ்வவ் வழிகளிற் சென்றாற்றான் கோரிய வூருக்குப் போதல் கூடும். அதுபோல நாமனைவரும் ஒரேவிதமான பரிபாகமுடையவர்களாயிருந்தால் நாம் அடையவேண்டிய மோக்ஷ வுலகத்திற்கு அநுஷ்டித்தற்குரிய மதம் (மார்க்கம்) ஒன்றே போதும். அப்படிக்கின்றி நாம் பல்வேறு வகைப்பட்ட பரிபாகங்களை யுடையோமாதலால் நம் பரிபாகங்களுக்குத் தகுந்த பல மதங்கள் வெளிப்படுத்தவேண்டுவது ஆவசிகமாக முடிந்தது. நிற்க,

பரிபாகங்களுக்குத் தகுந்த பல மதங்களை வெளிப்படுத்திய பெரியோர் ஒவ்வொரு மதங்களையும் சொல்லவந்தவிடத்து, மற்றைய மதங்களைத் தாழ்த்தியும் எடுத்துக்கொண்ட மதத்தை உயர்த்தியும் சொல்லியதென்னையோவெனின், ஆன்மாக்கள் தத்தமக் கேற்பட்டுள்ள மதங்களில் அதிக பற்றுதல் அடையு நிமித்தமேயாம். ஒன்றிற் பற்றுதலுண்டானாற்றான் அது காரணமாக ஒன்றைச் சாதித்தல் கூடும். எம் மதத்தினும் பற்றின்றி ஒருவன் எல்லா மதங்களும் சரியென்று வாசாகயிங்கரியம் செய்துகொண்டிருப்பானேல் அவன் அடையவேண்டிய இலாபத்தை யிழந்து

விடுவானென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. ஆதலின் ஆன்மாக்கள் தத்தமக்கு ஏற்பட்டுள்ள மதங்களினின்றும் வழுவாதொழுகி ஆன்ம லாபத்தை யடையவேண்டுதலைக்கோரியே மதங்கள் ஒவ்வொன்றையும் உயர்த்தியும் அங்ஙனம் உயர்த்திய வழி மற்றையவற்றைத் தாழ்த்தியும் பெரியோர் கூறியுள்ளாரென்க. எந்த மதத்தினின் றொழுகினும் அடையும் பயன் முடிவில் ஒன்றேயாகும். யான் இதனை விரித்துக் கூறவேண்டுவதில்லை. இம் முதுமொழியை நோக்குங்கள்.

"ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் — பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு."

இதன் முக்கிய தாற்பரியம். பசுக்கள் வேறு வேறு உருவங்களை யுடையனவாயிருப்பினும் அப் பசுக்களால் சொரியப்பட்ட பால் ஒரே தன்மையுடையதாயிருக்கும். அதுபோல நாம் உலகின்கண் அநுஷ்டித்தற்குரிய மதங்கள் பலவகைப்பட்டதாயிருப்பினும் அவ்வவற்றாலும் அடைதற்பாலதாகிய பயன் ஒரே தன்மையதாயிருக்குமென்பதாம். இதனால் எந்த எந்த மதங்களில் நின்று எந்த எந்த நாம ரூபமாக ஈசுரனைப் பாவித்தபோதிலும் முடிவில் எய்தும் பயன் ஒன்றேயென்பது இனிது புலப்படும். ஏனெனில், நாம ரூபங்களெல்லாம் மாயையினுடைய காரியங்கள். தெய்வமோ மாயைக்கு அதீதப்பட்டது. வாக்கு மனங் கட்கெட்டாதது. பக்தகோடிகள் உபாசிக்கவேண்டிய நிமித்தம் அதற்கு அநேக நாம ரூபாதிகள் கற்பிக்கப்பட்டுள்ளன. நாம ரூப கிரியா சூன்யமாகிய வஸ்துவிற்கு எந்த நாம ரூபாதிகளைக் கற்பித்தால்தானென்ன? எந்த நாமமும் அதற்குச் சொந்தமில்லை. "ஒரு நாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந், திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" என்றார் ஸ்ரீ மணிவாசகப் பெருமானர். ஆதலின் எந்த மதங்களும் முடிவில் ஒரே மதமாகும். எம் மதங்களினும் சர்வஞ்ஞராகிய அக்கடவுள் ஒருவரே நிற்பர். இது சத்தியமாம்.

" வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்துபார்க்கின்
விளங்குபரம் பொருளினின் விளையாட்டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின்மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற்றம்மா."

என்றார் தாயுமானர்.

" விலகிவீ ழருவித்தாரை வேறுவேறாகவோடிக்
குலநதிப் பாலிவைப்பினேகமாய்க் கூடுந்தோற்றம்
அலகில்பல் வழியுமூதா ரணிமையினென்றுமாறும்
பலபலசமய மீற்றினொருவழிப் படலும்போலும்."

என்பது காஞ்சிப்புராணம்.

ஆதலின் செல்லுதற்குரிய பல மார்க்கங்களும் ஊரின் சமீபத்தில் ஒன்றாக மாறுவதுபோலவும் வெவ்வேறு பெயர்களை யுடைய பல நதிகளும் சமுத்திரத்திற்சென்று ஒன்றாக மாறுவது போலவும் எல்லா மதங்களும் முடிவில் ஒரே மதமாகுமென்று துணிந்து தத்தமக்கு ஏற்பட்டுள்ள மதங்களில் நின்று வழுவா தொழுகி யுஜ்ஜீவித்தல் ஆஸ்திகராயுள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாகும்.

இதுகாறுங் கூறிப்போந்த நியாயங்களால் தோன்றி நின்று அழியுங் காரியமாயுள்ள இவ்வுலகத்திற்குக் காரணமான ஒரு முதற்பொருள் இருந்தே தீரவேண்டுமென்பதும், அதுதான் கடவு ளென்றும், தெய்வமென்றும், ஈசுரனென்றும், பிரமனென்றும், விஷ்ணுவென்றும், ருத்திரனென்றும் இன்னும் பல்வேறு நாமங் களாலும் சொல்லப்படுவதென்பதும், அங்ஙனம் பல்வேறு நாமங் களாற் சொல்லப்பட்டாலும் பொருள் ஒன்றேயென்பதும், புரா ணங்களில் ஒன்றை யுயர்த்தியும் மற்றொன்றைத் தாழ்த்தியுங் கூறியதன் கருத்து, காரணப் பிரம்மம் உபாசிக்கத்தக்கது காரியப் பிரம்மம் விடத்தக்கதென்பதும், தெய்வம் ஒன்றாயிருந்தும் ஆன் மாக்கள் பரிபாகங்கட்குத் தகுந்தபடி பல மதங்கள் இருக்கவேண் டுவது ஆவசிகமாக முடிந்ததென்பதும் பெறப்பட்டது.

இதோடு எனது உபந்நியாசத்தை நிறுத்திக்கொள்கின்றேன். பாத்திரனல்லாத என் பொருட்டும் சுமார் ஒருமணி நேரத்தைத் தயைகூர்ந்து செலவழித்த நமது சபாநாயகர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளுக்கும் மகா ஜனங்களுக்கும் எனது மனப்பூர்வகமான வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

பத்திராதிபர்.

---

## பாலசிக்ஷை.

எ-வது அத்தியாயம்.

ரு-வது வயது.

(தொடர்ச்சி.)

### வித்யாரம்பம்.

குழந்தைகட்கு இரண்டுவயது பூர்த்தியானவுடனேயே வித்யாரம்பம் செய்ய முயலவேண்டும். வித்யாரம்பமென்றால் இப் பசுங் குழவிகட்கு எழுதப் படிக்கப் பயிற்றுவதன்று.

பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய சீர்பெற்றோங்கும் நன்னாடுகளில், சிசுப்பள்ளிகளெனவும் தாய்க் கல்லூரிகளெனவும் கிண்டர் கார்டன் போதனாசாலைகளெனவும் இரண்டு வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கென்றே வித்யாரம்ப சாலைகள் எண்ணில ஏற்பட்டுள்ளன. இத்தகைய கல்விச்சாலைகள் ஏற்பட்டுள்ளது குழந்தைகளை இளமையிலேயே எழுதப்படிக்கப்பழக்குவதற்கன்று. சரீர வளர்ச்சிக்கும், தேகாரோக்கியத்திற்கும், புத்தியபிவிருத்திக்கும், நல்லொழுக்கத்திற்கும் சாதகமான முறைகளில் சிறு குழந்தைகளை இளமை தொட்டே அப்பியசித்துவருதற்கென்றே.

நமது தேசத்தில் இத்தகைய வித்யாரம்பசாலைகளின்மையின் சிசுக் கல்வி முற்றும் பெற்றோரை முக்கியமாய்த் தாய்களைப் பொருந்தியதாயிருக்கின்றது.

சரீரப் பயிற்சி, சன்மார்க்கப் பயிற்சி, அறிவுப் பயிற்சி எனப் பாலசிக்ஷை மூவகை அம்சங்களையுடையதாதலின், இவ்வம்சங்களொவ்வொன்றையும் தனித்தனியே விசாரிப்பாம்.

## சரீரப் பயிற்சி.

**சுசிகரம்.** தேகாரோக்கியத்திற்கு வேண்டிய சாதகங்களில் சுசிகரம் முக்கியமானது.

தேகத்திலும் உண்பதிலும் உடுப்பதிலும் கையாளுஞ் சாதனங்களிலும் சுத்தமாயிருக்கவேண்டுமென்னும் நல்லுணர்வைச் சிசுப் பிராயத்தினின்றே உஞற்றுதல் அவசியம்.

பொதுவாக மேற்குலத்தவருக்குச் சுசிகரவிருப்பமும், கீழ்மக்கட்கு அசுத்தத்தில் வெறுப்பின்மையும் இளம்பிராயந் தொட்டேயுள்ள பழக்கத்தினாலேயே யேற்பட்டிருக்கின்றன. ஆகவே சுத்தம் அசுத்தம் என்னும் உணர்வு அப்பியாசத்தையே பொருந்திய தாதலின் அவ்வுணர்வைச் சிசுப்பிராயத்தினின்றே வளர்த்துவருதல் தாயர்களின் முக்கிய கடமை.

சுசிகரம் சரீர சுகத்திற்கு மாத்திரம் சாதகமானதன்று. ஆன்மலாபத்தையும் பயத்தற்பாலது. பரிசுத்தமான ஆன்மா வசிப்பதற்கு யாக்கை நிர்மலமா யிருத்தல் அவசரமன்றோ? இது நோக்கியே நின்மலனைப் பூசித்தற்கு முன்னர் நீராடிச் சரீரத்தைச் சுத்தப்படுத்தல்வெண்டுமெனச் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

**ஆகாரம்.** மூன்றாவது வயது தேகவளர்ச்சிக்கு முக்கிய பருவமானதால் குழந்தையின் ஆகார விஷயத்தில் பெற்றோர்க்கு விசேஷ கவலை வேண்டும். ஜீர்ணசக்தியை யனுசரித்துப் பலத்தைக் கொடுக்கக்கூடிய உறுதியான ஆகாராதிகளை இவ்வயதுக் குழந்தைகட்குப் போதியவரையில் ஊட்டிவரவேண்டும்.

இரண்டு மூன்று வயதுக் குழந்தைகட்கு வயிறு சுரந்து அவயவங்கள் மெலிந்து வருதற்கு, பால் மறந்த இக் குழந்தைகட்குப் போதியவரையில் தக்க ஆகாரங் கொடாமலிருப்பதே காரணமாகும். இவ் வயதில் ஆகாரக் குறைவினால் பலவீனமடைந்த குழந்தைகள் தக்கவயது வந்த பின்னரும் திடப்படலரிது.

**நல்லாகாயம்.** உயிர்கட்கு ஆகார மெவ்வளவு அவசரமோ அவ்வளவு சுவாசிக்கும் நல்லாகாயமும் முக்கியமென்பதை மறவாமல் நிர்மலமான ஆகாயம் தாராளமாக வியாபித்திருக்கும் இடத்திலேயே குழந்தைகள் இருக்க உறங்கச்செய்யவேண்டும்.

அந்தோ! சுத்தாகாயம் உயிருக்கு இன்றியமையாததென்பதையுணராத நம்மவர்களில் சிலர் நெருக்கமுள்ள அறைகளின் சாளரம் கபாடங்களை யடைத்து நல்லாகாயப் பிரவேசத்தை முற்றும் தடுத்து, தங்கள்

அறிவின்மையே காரணமாக, முக்கியமாய்ச் சிறு குழந்தைகளின் சுகாதாரத்திற்குப் பெரிதும் இடர்புரிகின்றனர்.

**தேகவுழைப்பு.** ஓடல் ஆடல் முதலிய சரீர உழைப்பு, குழந்தைகளின் தேகவளர்ச்சிக்கும் அவயவப் பயிற்சிக்கும் ஆவசிகமானது. தம் குழவிகள் சிரமம் சிறிதுமின்றி வளரவேண்டுமெனச் சிற்சில தாயர்களுக்குள்ள தப்பெண்ணம், அக் குழந்தைகள் மனோதைரியமுள்ளவர்களாகவும் திடகாத்திரர்களாகவும் ஆதற்கு இடையூறுகின்றது. சிறு குழந்தைகள் இஷ்டப்படி குதிக்கவும் ஆடவும் விடவேண்டும். குழந்தைகளருகில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய அல்லது காயப்படுத்தக்கூடியவைகளொன்றுமிராதவண்ணம் மாத்திரம் கவனித்துக்கொள்ளவேண்டும்.

**புலப் பயிற்சி.** ஐம்புலன்களும் தத்தம் தொழில்களைச் சரிவர இயற்றப் பழக்குவது அறிவின் விருத்திக்கு அத்தியாவசிகமென்னும் உறுதி முன்னரே விளக்கியுள்ளது.

மூன்றாம் வயது ஆரம்பத்தினின்றே இப்புலப் பயிற்சி பெரிதும் கவனிக்கற்பாலது. கட்புலனால் பொருள்களை உற்றுநோக்கி அவற்றின் பருமன் ரூபம் வர்ணங்களையும் மற்றப் புலன்களால் வஸ்துக்களின் குணகுணங்களையும் பலவாற்றானும் கிரகிக்கக் குழந்தைகளைப் பழக்கிவருதல் அவர்கள் அறிவு விருத்திக்கு இன்றியமையாத சாதகமாகும்.

**சீதோஷ்ணம்.** சிறு குழந்தைகட்கு ஏற்படும் நோய்களின் காரணங்களுள் சீதோஷ்ண விபரீதங்கள் பிரதானமானவை.

இரண்டு வயதிற்குப் பின்னர், குழந்தை நடக்க ஆட ஓடக்கூடியதாகி, தாயின் இடைவிடாத காவலினின்று சற்று விலகி நிற்கும் சமயமாதலின், அதற்கு வெய்யிலின் வெப்பத்தினாலும் மிகுதியாகிய குளிரினாலும் தீங்கு வாராதவண்ணம் பாதுகாத்து வரவேண்டும். இவ் வயதினின்றே சீதோஷ்ண இடர்கட்குக் குழந்தைகளைச் சிறுகச் சிறுகப் பழக்கிவரவேண்டும். இவ்வகைய பழக்கமற்ற குழந்தைகள் வெகு சுலபமாக நோய்க்கிரையாகின்றன.

### சந்மார்க்கப் பயிற்சி.

சந்மார்க்கப் பயிற்சி மற்ற இரண்டினும் பெரிதும் முக்கியமானது.

ஒருவர்க்கு நோயற்றவன்மையுள்ள யாக்கையும் நூலொடு பழகிய நுண்ணறிவும் மாத்திரம் இருப்பதினாலாய பயனென்னை, அவர்க்கு நன்னெறியில் நிற்கும் மனத்திடனும் சீர்மையும் இல்லையேல்,

நல்லொழுக்கமடைவதற்குக் கல்வி இன்றியமையாத உபகரணமாயிருப்பினும் கல்விப் பயிற்சி யொன்றே அதை யடைதற்குப் போதியதன்று.

கற்பதொன்று அதற்கேற்ப நிற்பதொன்றன்றோ ?

சாமவேத கீதத்தால் சிவபிரான் மனதையும் இளகச்செய்த ஆற்றலுற்றவனெனப் புராணங் கூறும் தசக்கிரீவன் சர்வகலாவிற்பன்னனாயிருந்தும் சன்மார்க்க நெறியில் முற்றும் பிழை யிழைத்தானன்றோ ?

ஆகவே குழந்தைகட்கு அறிவைப் புகட்டுங் கல்வியைப் பயிற்றுவதுடன் நல்லொழுக்க நீதிகளையும் சிற்றிளம்பிராயத்தினின்றே போதித்து வருதல் அத்தியாவசியகம்.

இது நன்று இது தீது என்பதை யறிதல்மாத்திரம் போதியதன்று. தர்மாதர்மங்களை ஆன்மார்த்தமாயுணர்ந்து நன்மையை யியல்பாகவே விரும்பவும் தீமையை வெறுக்கவும் பழக்கிவருவதே முக்கியமானது. சிறு குழந்தைகட்குச் சன்மார்க்கத்தைப் போதிக்கும் முறைகளில் சிலவற்றைக் கூறுவோம்.

( இன்னும் வரும். )

த. பு. அம்மணியம்மாள்.

---

## புதுவையில் ஏக்கஸ். ( மலவறை )

புதுவை வாசிகளே, மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!

பொய்யனும் தன்னிடம் மற்றொருவன் பொய்பேசச் சகிப்பதில்லை. அங்ஙனமாகச் சத்தியவாதிகள் பொய்ம் மொழியைச் சகியாரென்பது கைமுதிக நியாயத்தால் சித்தந்தானே. ஆயினும் ஒரு விஷயத்தில் மாத்திரம் இது மாறிக் காண்கின்றது. அஃதியாதெனில்,

தங்களிடமில்லாத சுகுணங்கள் தம்மிட மிருப்பதாக ஒருவன் புகழ்ந்து பேசினல், அதாவது கொடுப்பதில் சிபி, கர்ண, ததீசி சமானர்கள் தாங்களென்பதாதி சொற்களால் துதித்தால் பொய் பேசினன் என்பதாக வெறுக்காது மகிழ்தலும், தங்களிடமுள்ள குறைகளை ஒருவன் எடுத்துக் காட்டினல் உண்மையைத்தானே சொன்னனென அங்கீகரியாது கோபித்திகழ்தலும் ஜீவர்களின் சுபாவமாயிருக்கின்றது. ஆகலின் யான் மன்னிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில்,

யான் இப்போது உங்களிடமுள்ள உண்மையான குறையொன்றை வெளியிடப்போகின்றேன். அதாவது:—

உலகத்தில் பசு பட்சியாதி அறிவிற்குறைந்த பிராணிகளும் தாம் வசிக்கும் இடம், உணவு, சுவாசிக்கும் காற்று முதலியவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதை நாம் கவனிக்கில் நன்குணரலாம். அங்ஙனமாக, சுகாதாரங்களை விளக்கும் நூல்களையும், அந் நூல்களில் வல்லவர்களால் உபந்யசிக்கப்படும் சுகாதார உபந்யாசங்களையும் சந்திக்கவல்ல நாம், நமது இடம், உணவு, சுவாசிக்குங் காற்று முதலியவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளாதிருத்தல் சரியாமா?

இடம், அன்னம், பானம், காற்று முதலியவைகள் எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு இகலோகசுகம் அதிகமாய்ப் பெறப்படும். அது மட்டோ! பரலோக சுகத்திற்கும் அவைகள் சாதனமேயாம்.

மேற்காட்டிய இடம் முதலியவைகளில் காற்று எவ்வளவு முக்கியமானதென்பதை நீங்கள் நன்குணர்ந்திருப்பீர்கள்.

இடம் வசதியாயில்லாவிடினும், அன்னம், பானம் இவைகளில்லாவிடினும் சிலபோதாவது நாம் ஜீவித்திருக்க முடியுமென்பதும், காற்றில்லாவிட்டால் சில நிமிஷங்கூட ஜீவித்திருக்க முடியாதென்பதும் உங்கட்குத் தெரியாததன்றே. ஆகையால், அப்படிப்பட்ட காற்றை எவ்வளவு பரிசுத்தமாய் வைத்திருக்கவேண்டியதென்பதைப் பற்றி நீங்கள் அடிக்கடி சிந்திக்காதிருப்பது சரியோ? சிந்தித்திருப்பீர்களாயின் நீங்கள் வசிக்கும் வீடுகளில் நீங்கள் வைத்திருக்கும் மலவறை அதாவது கக்கவுஸ் பிரதிதினமும் சுத்தஞ்செய்யப்படாதவிதமாக வைத்திருக்கமாட்டீர்கள். அதாவது உங்களிலேயே சிலர் வைத்திருக்கிறபடி பிரதிதினமும் சுத்தஞ்செய்யும்படி செய்வீர்கள். அங்ஙனமின்றி உங்கள் வீடுகளில் சமையலறைக்குச் சமீபமாகச் சிலரும், ஸ்நானவறைக்குச் சமீபமாகச் சிலரும், சயனவறைக்குச் சமீபமாகச் சிலருமாக மலத்தொட்டிகளை அமைத்து அவற்றில் 5, 6 மாதகாலம்வரையில்கூடச் சுத்தஞ்செய்யாது மலத்தைச் சேமஞ்செய்துவைத்திருப்பது எவ்வளவு சுகாதாரக் கவனமின்மையைக் காட்டுகின்றது பாருங்கள். உங்களில் சிலர் வீடுகள் சற்று விசாலமாயிருப்பதால் மலத்தின் துர்க்கந்தம் கிராணேந்திரியத்திற்குப் புலப்படாதிருப்பினும், அத்துர்க்கந்தம் வீட்டில் பரவி நாம் சுவாசிக்கும் வாயுவைக் கெடுத்து நமக்குச் சுகக்கேட்டை உண்டாக்காதிராது. ஆகையால் நீங்கள் உங்கள் மலவறையைத் தினந்தோறும் தகுந்தபடி சுத்தப்படுத்தி வைத்துக்கொள்

வது நன்றினும் நன்று. வேறெவ்வித செலவைக் குறைத்தாவது இக் கக்கவுஸை சுத்தப்படுத்துவதற்குச் செலவிடுவது விவேகத்தினும் விவேகமாமென்பது நீங்கள் சற்று என்மீது கோபியாது யோசித்தால் விளங்காததல்ல.

நீங்களென்செய்வீர்கள். உங்களூர் சுகாதாரக்கண்காணிப்பதிகாரிகள் இவ்விஷயத்தில் நமக்கென்னவென்று உதாசினமாயிருக்கின்றார்கள்.

ஜனங்கள் தங்கள் சுய ஆராய்ச்சியால் சுகக்கேட்டை நீக்கிக்கொள்ள முயலாதபோது சுகாதாரக் கண்காணிப்பதிகாரிகள் ( முனிசிப்பல் அதிகாரத்துக்குட்பட்ட சானிட்டரி உத்தியோகஸ்தர்கள் ) ஜனங்களைப் பலவந்தப்படுத்திச் சுகாதாரவிஷயத்தில் ஈடுபடுத்தக் கடமைப்பட்டவர்களன்றோ? அதனாலன்றோ அம்மைகுத்திக்கொள்வது முதலியவற்றால் உண்டாகும் நன்மையை அறியாத ஜனங்களை முனிசிப்பல் அதிகாரிகள் பலவந்தப்படுத்தி அம்மை குத்திக்கொள்ளச்செய்வது. அங்ஙனமிருக்க உங்களூர் (புதுவை) அதிகாரிகள் இக் கக்கவுஸின் அமைப்பைப் பற்றிக் கவனியாதது உங்கள் துரதிர்ஷ்டந்தான்போலும்.

ஆனதால், இதுவிஷயத்தில் முனிசிப்பல் அதிகாரிகளும் கண்காணிக்கவேண்டும். நீங்களும் சிரத்தையுடையவர்களாயிருத்தல்வேண்டும். இவற்றில் உங்களுடைய சிரத்தை முக்கியமானதாகையால், புதுவை அன்பர்களே! நீங்கள் சிரத்தையுடையவர்களாய் இதுவிஷயத்தில் அதிகாரிகளின் துணை வேண்டியதிருந்தால் அதற்குத் தக்க நானாவித பிரயத்தனங்களையும் செய்து பயனடையுங்கள். இவ் விஷயத்தில் அதிகாரிகளின் துணை உங்கட்கு அவசியம் என்பதாக எனக்குத் தோன்றுகின்றது. இங்கிலீஷ் இலாக்காக்களில் கக்கவுஸ் சுத்தஞ்செய்யும் வேலையாட்கள் முனிசிப்பாலிட்டியார் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவர்களாய் அவ்வதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள். அநேக நகரங்களில் முனிசிப்பாலிட்டியார் கக்கவுஸ் வரி வசூல்செய்து கக்கவுஸ் சுத்தஞ்செய்யும் வேலையாட்களுக்குத் தாங்களே சம்பளங் கொடுத்து அவர்கள் சுத்தஞ்செய்வதைக் கண்காணிக்க ஓவர்சியர்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவ்வண்ணம் உங்கள் புதுவையிலும் நடத்தும்படி நீங்கள் பலமான பிரயத்தனஞ்செய்யவேண்டும். நம்மவர் சுபாவப்படி நம்மாலென்ன ஆகும் நம்மாலென்ன ஆகும் என்று இவ்விஷயத்தில் சும்மா யிருப்பது சரியல்ல. பலதுளி பெருவெள்ளம். அதுபோல ஒவ்வொருவரது சிறு முயற்சியுங் கூடிப் பலமாகும். தீவிரப்படுங்கள்.

உங்கள் புதுவையானது எல்லா விதத்தாலும் எங் நகரத்தினும் சிறந்து அழகாய் விளங்கியும் இவ்வொரு விஷயத்தால், கடைப்பட்ட நகரவாசிகளாலும் இகழப்படுகின்றது. இது பெருங்குறைவன்றோ? யோசியுங்கள் யோசியுங்கள்.

சுகம்பெறுக. சுகம்பெருகுக. சுகம் நிலைக்க.

பரதேசவாசி.

---

# ரமணி.

---

## ஓர் காதற் கதை.

### அத்தியாயம் 3.

டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! டங்! கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்துவிட்டது. “சாவித்ரீ! சாவித்ரீ! அர்த்தராத்திரி யாயிற்றடி. டக் — டக் — டக் என்ற மகா மந்திரம் இன்னும் ஒலிக்கவில்லையே. ரமணி வாராமலே யிருந்துவிடுவளோ? ஆமாம், அவளும் உன்னைப்போல் ஒரு பெண்தானே. இந்த நள்ளிருளில் எப்படித்தனிமையாய் வருவாள்? ஆனால், ரமணீ! நீ தவறாமல் வருவதாக உன் தோழிக்கு உறுதிமொழி யுரைத்துவிட்டு இப்பொழுது நீ வாராமலிருப்பது நியாயமாகுமா? சஞ்சல சமுத்திரத்திலாழ்ந்து சாகத் துணிந்திருந்த சாவித்ரிக்கு நீ ஒரு அற்புத உற்சாகத்தைப் புகட்டிவிட்டு, அவள் புதிது புதிதான கனவுகள் கண்டுகொண்டிருக்க, நீ இப்பொழுது அமைதியாய் அகத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறாயோ? சீ! என்னடி சாவித்ரீ! ரமணியாவது! அமைதியாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறதாவது! அவள் வருவதைத் தடுப்பதற்கு என்னவோ ஒரு அசந்தர்ப்பம் நேரிட்டிருக்கவேண்டும். இன்று என்ன அசந்தர்ப்பம் நேரிட்டிருந்தபோதிலும் நாளை இரவேனும் தவறாமல் வருவாள். ஆனால், நெடுநேரம் அமைதியோடு ஆலோசித்த பின்பு, இராக்காலத்தில் உன்னை அவளது அகத்திற் கழைத்துப்போவது உசிதமல்லவென்றெண்ணி வாராமல் தங்கிவிட்டாளோ? ஆமாமடி, நீயே நன்றாய் ஆலோசித்துப்பார். நீயும் உன் தோழியும் அன்றிரவு தீர்மானித்த உபாயம் ஸ்திரீகளுக்குத் தகுந்ததல்லதான். அன்றிரவு என்னவோ நீ கண்ணீர் வடித்துக் கஸ்திப்பட்ட காட்சியைக் கண்ணுற்று உன்பாற்கொண்ட அன்பின் பெருக்கால் அவள் சித்தங்

கலங்கித் தையலர்க்குத் தகாத உபாயத்தை உனக்குச் சொன்னாள். நீயும், உடனே அவள் கருத்திற் கிணங்காவிடினும் அவள் வற்புறுத்திப் பேசப் பேச உன் சோகத்தின் பெருக்காலும் உன் காதலின் மடமையினாலும் அப்பொழுது அவளது ஆலோசனைக்குச் சம்மதித்துவிட்டாய். உன் பரிதாபகர விவாஹத்தைத் தடுப்பதற்கு ஜனார்த்தனர் ஒரு சிறந்த ஆலோசனை சொல்லக்கூடுமென்பது மெய்யே. ஆனால், அதற்காக நீ இராப்பொழுதில் திடீரென அவரை ஏன் காணவேண்டும்? என்னடீ! உனக்குச் சொற்பமேனும் நாணமில்லையா? அவர்தான் உன்னைப்பற்றி என்ன நினைப்பார்? இவ்வளவு விஷயங்களையும் அமர்ந்தாலோசித்துத்தான் ரமணி வராமலிருந்துவிட்டாள். ஆயினும் பொறுமையாயிரு. ரமணி உன் உயிர்ச் சகோதரி. இந்த உபாயத்தை அவள் கைவிட்டபோதிலும் வேறென்ன வேனும் சூழ்ச்சியைப்பற்றி ஆலோசித்துக்கொண்டுதானிருப்பாள். அல்லது உன் பரிதாபகர ஸ்திதியைப்பற்றித் தன் அத்தானுக்குச் சொல்லியிருப்பாள். ஒருகால் அவர்களிருவருமே கலந்தாலோசித்து ஓர் உபாயத்தைத் தீர்மானித்திருக்கலாம். அவ்வாறானால், நீயும் ரமணியும் அன்றிரவு சம்பாஷித்துக்கொண்ட விஷயமனைத்தையும் அவள் அவருக்குச் சொல்லியிருப்பாளோ? எல்லாவற்றையுஞ் சொல்லியிருந்தால் நீ நித்ய கன்னிகையாயிருக்கத் தீர்மானித்திருப்பதையும், நீ வீணை வாசிக்கக் கற்றுக்கொள்ளுங் காலத்தில் அவர் உன்னை நோக்கி, "உன்னிஷ்டப்படி உன்னையே மணந்துகொள்ளுகிறேன்" என்று சொன்னதையும் அவருக்குச் சொல்லியிருப்பாளோ? அப்பொழுது அவர் என்னென்ன எண்ணுவார். அவர் விளையாட்டாகச் சொன்னதை நீ மெய்யென்று நம்பி அவர் தன் வாக்குப் பிறழாது உன்னை மணந்துகொள்ளுவாரென்று நீ நம்பியிருப்பதாக சிலசமயம் எண்ணுவரோ. இல்லை யில்லை, அப்படி எண்ணமாட்டார். ஏனென்றால், அவரை நீ விவாஹஞ் செய்துகொள்ள வியலாதென்று நிச்சயித்துத்தான் நீ நித்ய கன்னிகையாயிருக்கத் தீர்மானித்திருக்கிறாயென்று அவர் அறிந்திருப்பார். ஆனால் நீ அவர்பாற்கொண்ட காதல் காரணமாக வேறொருவரையும் மணஞ் செய்யாதிருக்கத் தீர்மானித்திருக்கிறாய் என்று உன்பாற் பரிதாபமுற்று உன்னை ஒருகால் மணந்துகொள்ளுவாரோ? அதுவும் நிகழக்கூடிய விஷயந்தான். சாவித்ரீ! உனக்கு அவ்வளவு பாக்கியமும் சித்திக்குமா? பரிதாபங் காரணமாக அவர் உன்னை மணந்துகொள்வது உனக்குப் பாக்யமாகுமா? அதை விட நீ நித்ய கன்னிகையாயிருப்பதுதான் உனக்குச் சிறந்த பாக்யமாகும். நீ அவரிடம் காதலுற்றிருப்பதுபோல் அவரும் உன்பாற் காதலுற்றிருந்தால், — என்னடி சாவித்ரீ! நான் என்ன வீண் கனவு காண்கிறேன்!

என்! இது ஒரு வீண் கனவா? ஜனார்த்தனர் உன்பாற் காதலுற்றிருப்பது சம்பவமாகாதோ? என் ஆகாது? ஆ! இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. அன்றிரவு ரமணி என்னென்ன சொன்னாள். "உன் நிச்சிதார்த்தத்தைப்பற்றிக் கேள்வியுற்றதுமுதல் நீ இருக்கும் பரிதாப ஸ்திதியிலேயே இருக்கும் ஜனார்த்தனர்" என்றாள். "நான் குழந்தைப் பருவத்திலிருந்து அவர்கள் தங்கைபோல் அவர்களோடு வளர்ந்தவள். என் வார்த்தைகளை அவர்கள் கவனிக்கமாட்டார்கள். அவர்கள் கவனத்தைக் கவர உன்னிடத்தில்தான் ஓர் வஸ்ய சக்தி இருக்கிறது" என்றுஞ் சொன்னாளே. ஆகையால் ஜனார்த்தனா! நீ உண்மையில் சாவித்திரியைத்தான் காதலிக்கிறாயோ? பாலிய பருவத்தில், "உன் னிஷ்டப்படி உன்னையே மணந்துகொள்ளுகிறேன்" என்று மனப்பூர்வகமாகவே சாவித்திரிக்குச் சொன்னாயோ? சீ. நான் என்ன எண்ணம் எண்ணுகிறேன்! சாவித்ரீ! உன் ரகஸ்யத்தை அறிந்துகொண்ட ரமணி உன் சோகத்தைத் தணிக்கும் வண்ணம் என்னென்னவோ விபரீதங்களைப் பிதற்றினாள். உண்மையில் ஜனார்த்தனரது உயிர்க்காதலி ரமணிதான். ரமணியின் உயிர்க் காதலர் ஜனார்த்தனர். நீயும் ரமணியும் உயிர்ச் சகோதரிகள். நீ உன் உயிர்ச் சகோதரியின் சொந்த காதலரை அவளிடமிருந்து அபகரித்துக்கொள்ளும் விஷயத்தைப்பற்றி நீ எண்ணுவதே மகா பாதகமாயிற்றே. ஜனார்த்தனரும் அவரது காதலியும் இன்புற்று வாழ்வதைக் கண்டுங் கேட்டும் ஆநந்தித்து நீ நித்ய கன்னிகையாயிருப்பதே நீ அடையக்கூடிய பெரும்பேறு. இப்பேற்றிற்கு இடையூறாக விஜயரங்கப் பெரிய கிழவரது விவாஹம் நிச்சயிக்கப்பெற்றிருக்கிறது. அஞ்சாதேயடி, ரமணியும் அவளது காதலர் ஜனார்த்தனரும் எவ்வாறேனும் இவ்விவாஹத்தை நிறுத்திவிடுவார்கள். இவ்விஷயத்தைப்பற்றி நாளைக்கே ரமணி உனக்கு ஒரு கடிதமெழுதி யனுப்புவாள் பார். கவலைப்படாதே. அமைதியாய் நித்திரைசெய் போ."

என்றவாறு சிந்தித்தது, அர்த்தராத்திரி வரையில் சாளரத்தருகே யிருந்து தன் தோழி ரமணியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சாவித்திரியின் உள்ளம். அவ்வுள்ளம் ஆஞ்ஞாபித்தவாறே சாவித்திரி சயனத்திற்குச் சென்றாள். இஃதிங்ஙனமிருக்க,

அதிகாலையில் மணி ஐந்தாவதற்கு முன் பங்கஜவல்லியம்மாள் விழித்தெழுந்து, தன்னருகே சயனித்திருந்த தன் புத்திரியைக் காணாது அவள் தனக்கு முன்னமே எழுந்து பாத்திரந் துலக்கல் முதலிய காலைப் பணிகளைச் செய்யப் போய்விட்டாளென் றெண்ணிக்கொண்டே கிணற்

றருகே சென்றாள். ஆங்கு ரமணி யில்லாமையால் சமைய லறைக்குச் சென்றாள். அவ்விடத்திலும் ரமணி காணப்படவில்லை. பின்பு " ரமணீ! ரமணீ! " என்றழைத்தவாறே வீட்டி னெப்புறத்துந் தேடியும் ரமணியைக் காணாது திகிலுற்று ஜனார்த்தனனது சயனத்தருகே வந்து அவனைத் தட்டி எழுப்பி " ஜனார்த்தனா! ரமணி எங்கே? " என்றாள். " என்ன! ரமணியா? " என்று சொல்லியவாறே தன் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்துட்கார்ந்தான் ஜனார்த்தனன். " ஐயோ ஜனார்த்தனா! உன்னுடைய ரமணியைக் காணோமே. நான் என்ன செய்வேன்! ரமணீ! என் அம்மணீ! என் கண்மணீ! ரமணீ! ரமணீ! எங்கே யம்மா போய் விட்டாய்? " என்றவாறு பல சோகமொழிகளைச் சொல்லி யழலாயினள் பங்கஜவல்லியம்மாள். ஜனார்த்தனன் பெரும் பிரமையுற்றுச் சிறிதுநேரம் ஸ்தம்பித்திருந்துவிட்டான். பின்பு சற்றுப் பிரமைநீங்கி தன் அத்தையை நோக்கி: " ஏன் அத்தையம்மா அழுகிறீர்கள்? ரமணி வீட்டிலே தான் இருப்பாள். இதோ நான் அழைத்துவருகிறேன் பாருங்கள் " எனக் கூறித் தன் அறையைவிட்டகன்று " ரமணீ! ரமணீ! " என உரக்கக் கூவிக்கொண்டு இல்லமுழுவதுந் தேடினான். ரமணி வீட்டிலிருந்தாலல்லவோ காணப்படுவள். ஆகையால் கொதிக்கின்ற உள்ளத்தோடு மீண்டுந் தன்னறைக்கு வந்து " அத்தையம்மா! ரமணி எங்கே தான் போய்விட்டாள்! " என இதழ்கள் பதைபதைக்கப் பகர்ந்தனன். பங்கஜவல்லியம்மாள் முன்னிலும் அதிக சோகத்தோடு என்னென்னவோ மொழிகளைப் பிதற்றிக்கொண்டு தேம்பித் தேம்பித் திடீரென நிலத்தில் வீழ்ந்தாள். ஜனார்த்தனன் நேத்திரங்களிலும் நீர் ததும்பிவிட்டது. " ரமணீ! ரமணீ! " என்ற இரண்டே மொழிகளைக் கன்னெஞ்சையும் கனிவிக்கும் குரலிற் கூறி ஓர் நெட்டுயிர்ப்பெறிந் தேங்கிக் கட்டிலின்மீது சாய்ந்தான். தன் சால்வையால் தன் முகத்தை மறைத்துக் கொண்டான். அச்சால்வையைக் கண்ணீரால் நனைத்தான். உயர்ந்த கல்வியறிவும் நல்ல நாகரிகமுமுடைய ஜனார்த்தனன் இவ்வாறு ஓர் ஸ்திரீயைப்போல் ஓர் சால்வையைக் கண்ணீரால் நனைப்பது சிலருக்கு விந்தையாகத் தோற்றலாம். சிலர் அவனை ஒரு கோழையென மதிக்கலாம். யாருக்கு என்ன தோற்றியபோதிலும், யார் என்ன மதித்தபோதிலும், ஜனார்த்தனன் தன் அத்தை பெண்பாற் பூண்டிருந்த அன்பை, தங்கள் சகோதரிபாற் கொண்டிருக்கும் எவரும் அவன் கண்ணீருகுத்ததை விந்தையாகவும் கருதார். அவனைக் கோழையெனவும் மதியார்.

சுமார் மூன்றுமணி நேரத்தில் ரமணி காணாமற்போன விஷயம் பங்கஜவல்லியம்மாள் பந்துமித்திரர்கள் அகங்களிலெங்கணும் பரவிற்று.

ஓர் யௌவன கன்னிகை திடீரென ஓரிரவில் தன்னகத்தைவிட்டகன்றாள் என்றால் அவ்விஷயத்தைப்பற்றிக் கேள்வியுறுவாரிற் பெரும்பாலார் அக்கன்னிகைக்கும் அவளது குடும்பத்தார்க்கும் நிந்தையைத் தரக்கூடிய விஷயங்களையே பேசுவது சகஜம். ஆனால் ரமணி காணாமற்போன விஷயத்தைப்பற்றிக் கேள்வியுற்றா ரொவ்வொருவரும் "ஆ! இதென்ன மாயம்! அவள் எங்கேதான் போயிருப்பாள்? எங்கேதான் போயிருப்பாள்?" என ஒருவரை யொருவர் வினவி வியப்புற்றார்களே யன்றி ரமணியின் மானத்திற்குப் பங்கமான ஓரட்சரமேனும் எவரும் இயம்பினாரல்லர்.

மாலைப்பொழுதாயிற்று. மணி ஐந்திருக்கலாம். பங்கஜவல்லியம்மாள் சமையலறையில் தரைமீது படுத்துக்கொண்டு தன் புத்திரியை நினைத்து நினைத்தேங்கி அழுதுகொண்டிருந்தாள். ஜனார்த்தனன் மந்தஹாசம் இழந்த முகத்தோடு முற்கட்டில் ஓர் நாற்காலியில் சாய்ந்துகொண்டு ரமணியைப்பற்றியே ஆலோசித்துக்கொண்டிருந்தான். அவ்வேளையில் யாரோ முற்புற வாயிற்கதவைத் தட்டும் அரவங்கேட்டு ரமணிதான் வந்துவிட்டாளோ வென்றெண்ணி ஆவலுடன் எழுந்து சென்று கதவைத் திறந்தான். ஆனால், அந்தோ! அவன் ரமணியைக் காணவில்லை. கையிலொரு புத்தகத்துடன் நின்ற ஓர் பாலிகை ஜனார்த்தனனைக் கண்டதும் "நான் ரமணி யம்மாளைக் கண்டு பேசவேண்டும்" என்றாள்.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

---

# இலக்கியப் பகுதி.

---

## மணிமேகலை.

### உதையகுமரன் அம்பலம் புக்க காதை.

(பதினெட்டாவது மணிமேகலை அம்பலமடைந்தமை
சித்திராபதி உதையகுமரனுக்குச் சொல்ல
அவன் அம்பலம் புக்க பாட்டு.)

(தொடர்ச்சி.)

43 - 54 அரவ வண்டொடு தேனின மார்க்குந்
தருமணன் ஞெமிரிய திருநா றொருசிறைப்

பவளத் தூணத்துப் பசும்பொற் செஞ்சுவர்த்
திகழொளி நித்திலச் சித்திர விதானத்து
விளங்கொளி பரந்த பளிங்குசெய் மண்டபத்துத்
துளங்குமா னூர்தித் தூமலர்ப் பள்ளி
வெண்டிரை விரிந்த வெண்ணிறச் சாமரை
கொண்டிரு மருங்குங் கோதையர் வீச
விருந்தோன் றிருந்தடி பொருந்தினின் றேத்தித்
திருந்தெயி றிலங்கச் செவ்வியி னக்கவன்
மாதவி மணிமே கலையுட னெய்திய
தாபதக் கோலந் தவறின் றோவென

இ - ள். உதையகுமாரன் இருப்பிடத்தைக் குறுகிய சித்திராபதி யானவள், ஒலித்தலையுடைய வண்டுகளும், தேனினங்களும் சப்திக்கப் பெற்ற கொண்டுவந்திட்ட மணல்பரந்த அழகு பொருந்திய ஓர் பக்கத்தில், பவளத்தாலாகிய தூண்களையும், பசும்பொன்னாலாகிய செவ்விய சுவர்களையும், முத்துக்களாலாகிய சல்லியையும் தூக்கினையுமுடைய சித்திரங்களமைந்த மேற்கட்டியையும் உடைய ஒளிவீசுகின்ற பளிங்குமண்டபத்தில், பிரகாசிக்கின்ற சிங்காதனத்தில் பரிசுத்தமான மலர்ப்பள்ளியில், வெள்ளிய அலைகள்போல விரிந்த வெண்சாமரைகளைப் பெண்கள் கையிற்கொண்டு இருபக்கங்களினின்று வீசாநிற்க, வீற்றிருந்தவனாகிய உதையகுமாரனது அழகிய பாதங்களில் வீழ்ந்து நின்று துதித்தனள்; துதித்து நிற்றலும், உதையகுமாரன் சித்திராபதியை நோக்கி, திருத்தமான பற்கள் விளங்க அழகாகச் சிரித்து, " மாதவி மணிமேகலையுடன் பொருந்திய தவவேடத்திற்குப் பழுதில்லையோ " எனக் கேட்டனன்.

தேன் - பெண் வண்டு. வண்டும் தேனும் நல்ல மணத்தே செல்வன வாதலின் இங்கே சேர்த்துக் கூறப்பட்டன. ஊர்தி - ஏறுதற்கிடமாகவுள்ள ஆசனமென்னும் பொருட்டு. பள்ளி - இடம். எத்தி - ஏத்த. தாபதக்கோலம் - தவவேடம்; என்றது பிக்ஷுணிக்கோலத்தை.

மேல்வருவன சித்திராபதிகூற்று.

உதையகுமாரன் இருந்தவிடம் அவைக்களமாதலின் மணிமேகலை செய்தியைச் சிலேடையாற் கூறுவாள்.

55 - 65 அரிதுபெறு சிறப்பிற் குருகுகரு வுயிர்ப்ப
வொருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி
பாடல்சால் சிறப்பிற் பாதத் தோங்கிய

நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டுணீஇய
விரைவொடு வந்தேன் வியன்பெரு மூதூர்ப்
பாழ்ம்ம் பறந்தலை யம்பலத் தாயது
வாழ்கநின் கண்ணி வாய்வாள் வேந்தென
வோங்கிய பௌவத் துடைகலப் பட்டோன்
வான்புணை பெற்றென மற்றவட் குரைப்போன்

இ - ள். " அரிதிற் பெறும் சிறப்பினையுடைய பறவைகள் ஈனும் வண்ணம் ஒப்பற்றோங்கிய அழகிய கரிய காஞ்சி மரமானது, பாடல் மிக்க சிறப்பினையுடைய பரத கண்டத்தில் உயர்வு பெற்ற நாட்டிலுள்ளவர்கள் விரும்புமாறு மிக்க நன்மையோடழகுற்று, அழகிய பருவத்தில் வாசனையோடு மலரப் பெற்றது ; அதனை உதையகுமரனென்னும் ஒரு வண்டு உண்ணும்பொருட்டு எண்ணி யான் விரைந்துவந்தேன் ; அக் காஞ்சி மிக்க பெருமை பொருந்திய பட்டணத்தை யடுத்த பாழிடமாகிய புறங்காட்டைச் சார்ந்த உலகவறவியினிடத்து ஆகியது ; கூரிய வாளேந்திய அரசனே ! நின் மாலை வாழ்க " என்று மணிமேகலை செய்தியைச் சிலேடையாகச் சித்திராபதி கூறினள் ; கூறுதலும், பெரிய கடலில் கப்பலுடையப்பட்டவன் சிறந்த தெப்பத்தைப் பெற்றாற்போல உதையகுமரன் அவட்குச் சொல்லுவான்.

" அழகிய மணிமேகலையானவள் பரத சாஸ்திரத்தில், ஆடல் விரும்புமாறு மிக்க நன்மையோடழகுபெற்று, அழகிய பருவத்தில் பூப் பெய்தினள் ; அவளை உதையகுமரனாகிய நீ அனுபவிக்கவேண்டுமென நினைத்துவந்தேன் ; அவள் உலக வறவியினிடத்துச் சென்றனள் " என்ற பொருளைச் சிலேடையாக அமைத்துக் கூறினள் சித்திராபதியென்க.

திருமணிக்காஞ்சி என்பதற்கு அழகிய கரிய காஞ்சிமாமென்றும் அழகிய மணிமேகலை யென்றும் ; பரதமென்பதற்குப் பரதகண்டமென்றும் நாடகநூலென்றும் ; நாடக மென்பதற்கு நாடுகளினிடமென்றும் ஆடலென்றும் பொருள் கொள்க.

மேகலைக்குக் காஞ்சியென்று பெயருளதாதல் " ஒரு மரப் பெயரு மோரிசைப் பெயருங், கச்சிப் பெயருமே கலையுங் காஞ்சி " என்ற பிங்கலச் சூத்திரத்தால் துணியப்படும். நாடகம் இவளாற் சிறப்பெய்துமாகலின், " நாடகம் விரும்ப " என்றார். " உதையகுமரனெனு மொரு வண்டு " என்றது முன்னிலைப்புறம் ; அஃதாவது முன்னிலையாய்

நிற்கின்றவரை நோக்கிப் பிறரைக் கூறுமாறுபோலக் கூறுதல். உணீஇய - உண்ணும்பொருட்டு. பறந்தலை - புறங்காடு. கண்ணி - தலைமாலை. நின் மாலை வாழ்கவென்றல் மரபு.

மேல் வருவன உதையகுமான் கூற்று.

66 - 85 மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ
தோவியச் செய்தியென் றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
வேந்திள வனமுலை யிறைநெரித் ததூஉ
மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுத
மருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉ
மாயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கய னெடுங்க
ணறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்
பளிங்கு புறத்தெறிந்த பவளப் பாவையென்
னுளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டென்
றிடையிருள் யாமத் திருந்தேன் முன்னர்ப்
பொன்றிகழ் மேனி யொருத்தி தோன்றிச்
செங்கோல் காட்டிச் செய்தவம் புரிந்த
வங்கவ டன்றிற மயர்ப்பா யென்றன
டெய்வங் கொல்லோ திப்பியங் கொல்லோ
வெய்யா மையலேன் யானென் றவன்சொல

இ - ள். " பொருந்திய பளிக்கறையின்கணுள்ள புதுமையினையுடைய பாவையாகிய இது சித்திரச்செய்கையென்று நினைத்து நீங்குவேனாகிய என் முன்னர், காந்தள் மலர்போலும் அழகிய சிவந்த கைகள் கட்டியகட்டு விடாவாய் எந்திய இளமைதங்கிய அழகிய முலைகளைச் சிறிது நெரித்த செய்கையும், பவளம்போலும் சிவந்த வாயினுள் ஒன்றோடொன்றொத்து விளங்குகின்ற ஒளிமிக்க முத்துக்கள் கூர்மையுற்றாலொத்த முட்கள்போன்ற பற்களினிடத்தூறிய அமுதத்தை யுண்ணுதற்கு ஆசைப்பட்ட எனதுயிர் செழிப்புறும் வண்ணம் புதிய இளநகை தோன்றியதும், கரிய இதழ்களையுடைய குவளைமலரைப் புறத்தே யோடச்செய்து வேற்படையை வென்ற கயல்போன்ற கரிய நெடிய கண்கள் மணிமேகலைக்கு

அறிவு வேறுபட்டதென்று குறிப்பித்துச் செவிக்கண்ணே சென்ற அழகும் ஆகிய இவற்றைக்கொண்டு, உவவனத்திலுள்ள பளிக்கறை வெளியிற் காட்டிய பவளப் பதுமைபோலும் மணிமேகலையானவள், உயிரைக் காத்தல்செய்து என் உள்ளத்தி லொளித்தனள் என்று இருள்மிக்க இடையாமத்தில் துயிலாதிருந்தேனுடைய முன்பு, பொன்போல் விளங்கும் உடம்பையுடைய ஒருத்தி தோன்றி, செங்கோலின் முறைமையை எனக்கெடுத்துக்காட்டி, செய்தற்குரிய தவம்புரிந்த அம் மணிமேகலையின் விஷயத்தை மறந்துவிடு என்றனள்; என்றவள் தெய்வமோ! தெய்வலோகத்திற் றோன்றிய பொருளோ! இன்னதென்றறியாத மயக்கத்தையுடையேன் யான் " என்று உதையகுமரன் சொல்லினனென்க.

மணிமேகலை தன்னைக்கண்டு அஞ்சிப் பளிக்கறையிற் புகுந்தபொழுது அவளைச் சித்திரமென்று தான் எண்ணியிருந்ததாக உதையகுமரன் கூறினன். பவளம் - வாய்க்கு ஆகுபெயர். அருந்தேமாந்த - அருந்த ஏமாந்த; அகரம் தொகுத்தல். புகூஉ - புகுந்து. பளிங்கு - உவ வனத்திலுள்ள பளிக்கறை. ஒருத்தி யென்றது, மணிமேகலாதெய்வத்தை. எய்த்தல் - அறிதல்.

( வரும். )

பத்திராதிபர்.

---

## அக்ஷராவதான விடுகதை வினவிற்கு விடை.

கலைமகள் வெண்டாமரை ஒன்பதாவ திதழில், பாதாங்கி உபாத்தியாயர் ஸ்ரீமத் K. முத்துசாமிஉடையார் வரைந்த அக்ஷராவதான விடுகதை வினவிற்கு விடை :

வெண்பா.

பான்மொழிப் பைங்கிளியே பாதாங்கிப் பைந்தமிழ்தேர்ந்
தான்மொழிவி னவிடையைத் தந்திடுதி — தேன்பொழிவெண்
கஞ்சத் தவிசேய் கலைமகள்தா னப்பொருளென்
றஞ்சாம னண்ப வறை.

"கலைமகள்" என்ற மொழியில் திரி உபய அக்ஷரங்களாகிய மூன்றாவது இரண்டாவது அக்ஷரங்கள் சேர்ந்து சிகரமெனப் பொருள்படும் " மலை " என நின்றன. இவ்வாறே, நான்காவது இரண்டாவது அக்ஷரங்களும், முதலாவது மூன்றாவது இரண்டாவது அக்ஷரங்களும், மூன்றாவது முதலாவது ஐந்தாவது அக்ஷரங்களும், முதலாவது ஐந்தாவது அக்ஷ

ரங்களும், மூன்றாவது முதலாவது அக்ஷரங்களும், நான்காவது இரண்டாவது மூன்றாவது முதலாவது இறுதியாகிய ஐந்தாவது அக்ஷரங்களும் முறையே ஆண்மான், இலக்குமி, துப்பார்பெண், மது, இளமை, சரஸ்வதி எனப் பொருள்படும் "கலை", "கமலை", "மகள்", "கள்", "மக" கலைமகள் என நின்றமை அறிக.

பைங்கிளிநேயன்.

---

# சாத்திரப் பகுதி.

## மங்கலம்.

(தொடர்ச்சி.)

எல்லா அனர்த்தங்களி னெத்தனங்கள் யாவற்றினுக்கும் மூலஸ்தம்பமாயும், எனதென்னும் கொடியினுக்கு வேராகியும், இராநின்ற அகங்காரமானது .ஆயுளாங்கு இன்பகாரணமன்றாம், என்னை? தோடங்களியாவும் அபிமான மொன்றையே மூலமாயுடைத்தா யிடரைப் பயத்தலினென்க. அஞ்ஞானத்தால் வாளா அகங்காரம் உதயமாய் நாற்புறமும் வளர்ந்தோங்குகின்றது; பொய்யாய்த் தோன்றிய அத் தாகங்காரமாய பகையாற் பயமுறார் யார்கொல்! (இதற்கும் மூலம் மோகமெனவுணர்க) நீணாளாய்ச் சனன மரண நரக முதலிய அளவிறந்த அனர்த்த பரம்பரையை அனுபவித்து மறித்தும் மறித்தும் அதற்கேதுவாய சுகலேசா லேசங்களை யெவ்வித வருத்தத்தாலாவது எய்தவேண்டுமென விச்சித்துக்கொண்டிருக்கின்றமையின், அதிதீனராய் விஷயாசக்தியுடையார்க்குச் சாதனமெனப் பலமெனப் பலவித வுருவுடைச் சம்சாரம் அகங்கார வயத்தானே விருப்பு வெறுப்பு வெந்துயர் விசனம் என்பன முதலிய தோடவடிவ வைப்பில்லங்களில் நற்றொழிற்குதவி நண்ணுவாற்றால் ஈனமான தனமா யுண்டாயிருக்குமென்பதை விரிக்கவும் வேண்டுமோ.

தேக சோகங்களும், கருத்தின் வருத்தங்களும், துர்ச்சீலங்களும், அகங்காரத்தானே யுண்டாமாதலின் யாவர்க்கும் அகங்காரம் ஆமயமேயாம். நீணணிகழும் நெடும் பகையான இவ் வகங்காரமுற்றோர் அயில்வதும் மாந்துவதும் அணுகாராகலின் போகானுபவம் பொருந்துவதெங்ஙன்? வேடனால் விகங்கங்கண்மீது வெவ்வலை வீசப்பெறலேபோல அகங்காரமாகிய தோஷத்தாற் சமுசார நிசியில் நீடிய மனமோகித மாயை

யானது நம்மீது வீசப்பட்டுள்ளதன்றே. கிரியிற் கருங்காலிக் கிளைத் தருக் கிளம்பலேபோல் அகங்காரத்திருந்து நீடியனவாய் நீக்கமுடியா தனவாய்ப் பெரியனவாய துயரமானவை யுண்டாகின்றன. சாந்தியாம் சசிக்கு இராகுவின் முகமாயும், சற்குணச் சலச மலர்க்குத் தடித்தன்ன இமமாயும், யாவரிடத்தும் தயைமழை பெய்யும் சமதிருஷ்டி யெழிலிக் குச் சரற்காலமாயும் இராநின்ற அகங்காரத்தை விட்டணுகாதிருத்தலே வீடாம்.

அகங்கரமதனை விட்டா லாகபிமானமும் மமதையும் மற்றவையும் அற்றொழித லொருதலையேயாமன்றே. யாமெப்பெயருடையருமல்லர் எமக்கு விஷய இச்சையும் மனமுமில்லையாதலின் பரஸ்பரம் தம்மைப்போ லியாவரையு நோக்கி யொருவரிடத்தும் வயிரம் சிறிதுமின்றி ஜைனனை யொப்ப இம்சையற்றவராய் வாழ்வதே நலம். ( நிந்திக்கப் பாலவ ரிடத்தும் நற்குணங் கவரும் நியாயத்தால் ஜைன திருஷ்டாந்தமென வுணர்க. )

ஆகவாதனையா லருந்தும் அறுவகையாய உண்டிகளும், சாஸ்திர வாதனையாற் செய்யும் சன்மகம் முதலியவையும், உலக வாதனையா லுஞற்றும் நித்திய கன்மங்களும் அரசநீதிகளும் மற்றும் பிறவும் அகங்கா ரத்தா லுண்டாகின்றன வாதலி னவையெல்லாம் அத்தியந்தம் பொய் யாம். ஆனல் அகங்காரமற்ற பதமே மெய்யாம்

( இன்னும் வரும். )

வீர. சு.

---

## நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

32. கரம்லேடி நியாயம்: — கரம்லேடி – கையை நக்குகின்றவன், நியாயம் – திருஷ்டாந்தம். இது பேராசையால் கையில் கிடைத்ததை யுமிழந்து ஏமாந்தவன் செய்தி இதுபோலவென்கின்றது. அதாவது: விருந்துண்ணச்சென்ற ஒருவன் தனக்குப் பரிமாறிய இலட்டுகத்தை, இன்னும் அதிகம் பெறவேண்டுமென்னும் ஆசையால் தன் பின்புறத்தில் வைத்துவிட்டு, மற்றொரு இலட்டுகத்துக்குக் கையேந்தி நின்றான். அப்போது பரிமாறக் கொண்டுவந்த இலட்டுகம் முழுமையும் செலவாய்விட்ட

தால் இவன் அபீஷ்டம்போல் வேறு லட்டுகம் கிடைக்கவில்லை. பிறகு தன் பின்புறம்வைத்த இலட்டுகத்தையாவது தின்போமென்னும் வேட்கையா லதைப் பார்த்தபொழுது அதை யொரு பூனை கொண்டுபோய் விட்டதால் கிடைத்ததும் போய் இலட்டுகம் வாங்கிய கையை நக்கிக் கொண்டிருந்தான்போல என்பதாம்.

33. கட்டகுடீ பிரபாத நியாயம்: — கட்டகுடீ – ஊர் எல்லைப் புறத்தி லமைக்கப்பட்ட குடிசை, ( இங்கு இது பரிபாஷையால் சுங்கச் சாவடியைக் குறிக்கும். ) பிரபாதம் – விடியற்காலம், நியாயம் – திருஷ்டாந்தம். இது சித்தாந்தத்தை மறுக்கவெழுந்த பூர்வபக்ஷி பலபல நியாயங்கொண்டு பேசிவா அவைகள் சித்தாந்த பக்ஷத்தையே முடிவில் ஸ்தாபித்து நிற்ற லிதுபோல வென்கின்றது. அதாவது: சுங்கச் சாவடிக்குத் தப்பித்துக்கொண்டு இரவில் வேறு மார்க்கஞ் சென்ற ஒருவனை அவ்வழியானது விடியற்காலத்தில் சுங்கச் சாவடிக்கே கொண்டுவந்துவிட்டாற்போல வென்பதாம்.

“ சுற்றிச் சுற்றிச் சுங்கச் சாவடியே வந்தான் ” என்பதிதுவேயாம்.

34. தர்வீபாகரச நியாயம்: — தர்வீ – அகப்பை, பாகரசம் – பக்குவமான சுவை, நியாயம் – திருஷ்டாந்தம். இது தனக்கு உபயோகமின்றிய கல்வியையுடைய போதகனது செய்தி இதுபோலவென்கின்றது. அதாவது: எங்ஙனம் சுவையுள்ள உணவுகளைப் பலர்க்கும் பரிமாறும் அகப்பை தான் சுவையை யறியாதோ அங்ஙனமென்பதாம்.

35. தீபஸ்தம்ப நியாயம்: — தீபஸ்தம்பம் – விளக்குத்தண்டு, நியாயம் – திருஷ்டாந்தம். இது மேலதுபோன்றதே. மற்றொருவகையும் பொருந்தும்; எங்ஙனமெனில், எங்ஙனம் தீபஸ்தம்பமானது மற்றைய வஸ்துக்களை விளக்கித் தான் இருட்டிலிருந்தபோதிலும், அதனால் பயன்பெறுவார் அத்தீபஸ்தம்பத்தை இகழ்ந்து இகத்தலின்றோ, அங்ஙனமே போதகாசிரியன் தமக்குப் போதித்த வண்ணம் நடவாமை காரணமாக அவனால் பயன்பெறும் சிடர் அவ்வாசிரியனை இகழ்ந்து இகவாதிருத்தல் வேண்டுமென்பதாம்.

( இன்னும் வரும். )

அநந்தபத்மநாபஸ்வாமி

காஞ்சீபுரம்.

## முன் பின் செத்திருந்தாலன்றோ சுடுகாட்டிற்குப்போகும் வழி தெரியும்.

அன்பர்களே,

நீங்களிந்த வாக்கியத்தைப் பலகால் கேட்டிருப்பீர்கள். ஆனுலிதைக் கேட்ட உடனே இது ஒரு அசம்பவார்த்தமுடைய வாக்கியமாக வெண்ணிப் பெருநகை நகைத்திருப்பீர்கள்.

ஆனுலிதிலொரு அர்த்த விசேஷ மிருக்கிறது. அது அருமையான சத்போதனையாயு மிருக்கிறது. அதனை நாம் தெரிந்துகொள்வதற்குமுன் இவ் வாக்கியத்திலுள்ள பதங்களுக்கு இப்படி இப்படிப் பொருள்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

முன் என்பது அகந்தை.
பின் என்பது மமதை. எங்ஙனமெனில்,

அகங்கார மமகார மென்னு மிரண்டனுள், நான் என்னும் அகங்காரம் முளைத்தபிறகே, எனது என்னு மமகாரம் தோன்றும் ஆகலின் என்க.

சாதல் என்பது நாசத்தை அறிவிக்கும்.

சுடுகாடு என்பது ஸ்மசானமாம். இது உலகப்பொருள்களிலொன்றாய் நாம் காணும் சுடுகாடன்று. பின்னெதுவெனில்,

" மாயாமமதாகங்கார தகனம் ஸ்மசானம் "

என்ற சுருதிப்படி மாயையும் அதன் காரியங்களான அகந்தை மமதைகளும் தகனமானநிலையே ஸ்மசானமாம்; அதுவே சிவபதம். இப்படிப்பட்ட சிவபதத்தில் விளங்காநின்ற ஆனந்தரூபியைத் தான் 'சுடலையாடி' யெனச் சுருதி கூறும்.

இந்தச் சுடுகாட்டிற்குப் போகும் வழி என்பது சிவஞானமாகும். இச் சிவஞானமானது அகங்கார மமகாரங்கள் எதுகாறும் நாசமாதலில்லையோ, அதுகாறும் உதியாது. இதனை,

" நானெனதென்ப திருந்திடு காறும்
ஞான முறானது நண்ணில வுயிற்
றானிலை யாத சகந்திகழ் கிற்குந்
தீனமிலாத சிவந்திக ழாதே. "

என்ற பிரபுலிங்கலீலைச் செய்யுளும் விளக்குகின்றது.

இதனுல் போந்த பொருளியாதெனில், முன் (அகங்காரம்) பின் (மமகாரம்) செத்திருந்தாலன்றோ (நாசமா யிருந்தாலல்லவா) சுடு காட்

டிற்கு (சிவபதமாகிய மோட்சத்திற்கு) போகும்வழி (சாதனமான சிவஞானம்) தெரியும் (உதிக்கும்). அதாவது அகம் மமதைகள் நாசமானு லன்றே மோட்ச சாதனமான சிவஞான முதிக்கும் என்பதாம்.

இதனுல் அகம் மமதைகளின் நாசநிலைவடிவ மோட்சம் சாத்திய மெனவும், அதற்குச் சாதனம் சிவஞானமெனவும், அச் சிவஞானம் உதிப்பதற்கு எது, அகம் மமதைகளின் நாசமெனவும் எற்படுகின்றது. இதிலொரு சங்கை. சாத்தியரூப அகம் மமதைகளின் நாசமும், அதன் சாதன வடிவ ஞான எதுவான அகம் மமதைகளின் நாசமும் ஒன்ரு? வேரு? ஒன்றெனில், பௌத்திரனும், பிதாமகனும் ஒன்றெனல்போல முரணும். வேறெனில், ஞானைதுவான அகம் மமதைகளின் நாசத்திற்கும், சாத்தியரூபமான அகம் மமதைகளின் நாசத்திற்கும் வேற்றுமையாது?

சமாதானம். நாசம் இருவகை. ஒன்று காரியமாத்திர நாசம், மற்றையது காரண சகித காரிய நாசம். ஞானத்திற்கு எதுவான அகம் மமதைகளின் நாசம், காரியமாத்திர நாசமாகும். இது பரோட்ச ஞானத்தால் உற்பன்னமாம். சாத்திய ரூப அகம் மமதைகளின் நாசமானது காரண சகித நாசமாகும். இது அபரோட்ச ஞானத்தால் உற்பன்னமாம். இவ் வபரோட்ச ஞானமே மோட்சத்திற்குச் சாட்சாத்சாதனமாகும். அகம் மமதைகளின் காரணம் அஞ்ஞானம். அதுவே மாயை. ஆதலினுற்ருன், ஸ்மசானம் இதுவெனக் காட்டிய சுருதியானது மாயாசகித அகங்கார மமகார நாசமே ஸ்மசானமெனப் பொருள்படும்படி "மாயாமமதாகங்கார தகனம் ஸ்மசானம்" எனக் கூறியது. இதனை யூகித்துணர்ந்து சத்சாஸ்திர சிரவணத்தால் பரோட்ச ஞானவாயிலாக நானெனதென்பதை யறுத்துச் சத்குருமுகத்தால் அபரோட்ச ஞானம்பெற்று, சிவாநந்தப் பெருவாழ்வைப் பெறுவோமாக. சுபம்.

இதோபதேசி.

---

## ஏஜண்டுகள் தேவை.

கலைமகள் பத்திரிகைக்கு 100 சந்தாதாரர்களைச் சேர்க்கும் ஏஜண்டுகளுக்கு ரூ. 10 கமிஷன் கொடுக்கப்படும். அங்ஙனம் சேர்க்கப்படும் சந்தாதாரர்கள் தமது சந்தாவை முற்பணமாகப் பத்திராதிபருக்கே நேராக அனுப்பிவிடல்வேண்டும்.

ப — ர்.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற
அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பருய், ஆயுர்வேத
## ஔ ஷ த சா லை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள்கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

---

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு
வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

32. இரத்த சுத்தி. — தேகத்தில் இரத்தம் கெட்டுப்போகுவதால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண், புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம் முதலிய சருமவியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல் நிறம் மாறுதல், தோலில் சொறணையற்றுப்போகுதல், புத்தி மந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். இரத்தத்திலுள்ள நஞ்சைப் போக்கி, சுத்தப்படுத்தி, தேக வலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி உண்டாக்கும். 20 நாளைக்குப் போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபா 2, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

33. சித்த மகரத்துவஜம். — இது மகரத்துவஜத்தைவிட சிறந்த அவுஷதம். இதனுல் தீராத வியாதி ஒன்றுமில்லை. சர்வ சுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினி மாந்தம், காலரு, சீதபேதி, ரத்தபேதி, சகல வாயுவு இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம் மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100 வருஷமானலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. எழு வேளைக்குள்ள மருந்து ரூபா 3, வி. பி. செலவு பிரத்தியேகம்.

34. வாயு சம்ஹாரி. — கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால் முடக்கு, தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலை நோய், பக்க சூலை, பார்சுவாயுவு, திமிர்வாயுவு, அஜீரணம், குன்மம், அண்ட வாயுவு, சூலைவாதம், மலஜலக்கட்டு முதலிய அநேகவித வாயுவு ரோ[illegible] களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செல[illegible] டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்

35. **காலற என்னும் வாந்திபேதிக்கு மருந்து.** — இக் கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா ஒன்று, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. **மலபந்த நிவாரணி.** — மல ஜலக்கட்டு, அக்கினி மாந்தம், வாயுவு, குடல் புறட்டல், சூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை, புளித்தயேப்பம் தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. **சந்திராமிருத ரசம்.** — அசாத்தியமான காசம், இருமல், க்ஷயமுதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும். நல்ல பசியும், தேக பலமும் உண்டாக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்

38. **சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து.** —எத்தனைநாள் பட்டதானாலும் இம் மருந்தினால் வயிற்று கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிராணி, வயிறுகடுப்பு முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

39. **விஷ்ணுதைலம்.** — எப்பேர்ப்பட்ட தலைவலிக்கும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத் தேய்க்க வேண்டும். இடுப்புநோய், கழுத்துநோய், பக்கசூலை, கைகால்பிடிப்பு முதலியனவும் இன்னும் தேகத்தில்காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ள இடத்தில் நன்றாகத் தேய்க்க சுகமாகும். தேள், நட்டுவாக்களி, பூரான், இதுகள் கொட்டின அல்லது கடித்தவிடத்தில் இம்மருந்தைத் தடவி நன்றாகத் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

40. **சுதுமாரதைலம்.** — இதை பிரதிதினமும் ஆண்குறியின்மேல் பூசிவந்தால் லிங்கத்தின் சோர்வு, ஆண்குறி துவளல், கோணல், நரம்புகளின் தளர்ச்சி நீங்கி, நீண்டு, கெட்டிப்பட்டு மிகுந்த வலிவுகொள்ளும். இழந்துபோன போகசக்தி முற்றிலும்பெற்று சுகிக்கலாம். விலை சீசா 1-க்கு ரூபா 1, வி பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

*Sri Venkatesa Perumal Koil Sannathy,*

TANJORE.